O.S.57-2023

**முதன்மை மாவட்ட நீதிமன்றம், புதுக்கோட்டை**

அ.வ.எண்.57/2023

வாதி தரப்பு 1வது சாட்சி சண்முகவள்ளி என்பவரின் வாக்குமூலம் இந்திய சாட்சிய சட்டத்தின்படி திருமதி. அனுராதா, கிரேடு-1 பெஞ்ச் க்ளார்க் என்பவரால் சத்தியபிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திருமதி. சண்முகவள்ளி | வயது | : | 40/24 |
| கணவர் பெயர் | : | ராஜா | தாலுகா | : | புதுக்கோட்டை |
| கிராமம் | : | வசந்தபுரி நகர் | தொழில் | : | ஆசிரியர் |

நாள்-19.10.2024

வா.சா.1

<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1) எனது சொந்த ஊர் சம்மட்டிவிடுதி. எனக்கு திருமணம் ஆன ஊர் செம்பாட்டூர். நான் முத்தன்கோன்பட்டியில் பணிபுரிந்து வருகிறேன்.

2) நான் பணிபுரியும் முத்தக்கோன்பட்டியிலிருந்து சம்மட்டவிடுதி சுமார் 20 கி.மீ -க்குள் இருக்கும். தற்போது புதுக்கோட்டை டவுன், வசந்தபுரி நகரில் வசித்து வருகிறேன்.

3) நான் பணிபுரியும் பள்ளி அரசு பள்ளி என்றால் சரிதான். அந்த பள்ளியில் ஐந்து வகுப்புக்கள் உள்ளது. அந்த பள்ளியில் இரண்டு ஆசிரியர்கள் பணிபுரிகிறார்கள்.

4) நான் 1 முதல் 3 வகுப்புகளுக்கு பாடம் கற்பித்து வருகிறேன். ஆசிரியர்களுக்கான தகுதி தேர்வு 2012ல் தான் ஏற்பட்டது. 2005ம் வருடம் மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகம் மூலமாக பணிக்கு வந்தேன்.

5) வழக்கு விபரங்கள் அனைத்தும் வழக்கறிஞருக்கு நான்தான் சொன்னேன். சம்மட்டிவிடுதி காவல் நிலையத்திலிருந்து பிரதிவாதி கொடுத்த புகாரின் அடிப்படையில் 28.09.2022ம் தேதி காவல் நிலையத்திற்கு வரச்சொல்லி அழைப்பாணை வந்தது. மேற்படி தேதியில் நான் எனது அண்ணன் கோவிந்தராஜ், அண்ணி அன்னபூரணி, எனது தம்பி பாஸ்கர் ஆகியோர் சம்மட்டிவிடுதி காவல் நிலையத்திற்கு சென்றிருந்தோம்.

6) எங்களுடன் எனது அப்பா, அம்மா காவல் நிலையத்திற்கு வந்தார்கள் என்றால் அவர்கள் தனியாக வந்திருந்தார்கள்.

7) காவல் நிலையத்திற்கு சென்றவுடன் என்னிடம் காவல் துறையினர் என் மீது புகார் வந்திருப்பதை சொன்னார்கள். அது பொய் புகார் என்று சொன்னேன். காவல் நிலையம் போனவுடன் அங்கு பிரதிவாதி கருணாநிதி மற்றும் அவரது அண்ணன், தம்பிகள் மூன்று பேர்கள் இருந்தார்கள். அவர்கள் என்னை பார்த்து அசிங்கமாக பேசினார்கள். போலீசார் பிரதிவாதிக்கு ஆதரவாக நாங்கள் அவர்களை மிரட்டியதாக சொன்னார்கள். அதற்கு நான் அன்றைய தினம் பணியில் இருந்தேன் என்று சொன்னேன்.

8) கருணாநிதி புகார் கொடுத்ததற்கு காரணம் நான் அவர் மீது புதுக்கோட்டை முதன்மை சார்பு நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தது தான் காரணம் என்றால் அது பொய் புகார். எங்களது பூர்வீக சொத்தை கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளோம். அந்த வழக்கில் நான், எனது அண்ணன் மற்றும் எனது தம்பி ஆகியோர் வாதிகள் என்றால் சரிதான்.

9) வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு நானோ, எனது சகோதரர்களோ பிரதிவாதியை பார்த்து பேசினோமா என்றால் இல்லை.

10) வழக்கு தொடர்பாக எனது அப்பா கருணாநிதியிடம் பார்த்து பேசினார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

11) பிரதிவாதி கருணாநிதி எனது பெரியப்பா அய்யாக்கண்ணுவின் மகன் என்றால் சரிதான்.

12) எனது தந்தை துரைச்சாமி அவர்களது குடும்பத்தில் பிறந்த இளையவர் என்றால் சரிதான். எனது தந்தையாருடன் 4 பெரியப்பாக்களும், 2 அத்தைகளும் உடன் பிறந்தவர்கள். எனது தந்தையார், பெரியப்பாக்கள், அத்தைகள் அனைவரும் எனது தாத்தா சின்னையாவின் பிள்ளைகள் என்றால் சரிதான்.

13) வழக்கு சொத்துக்களை எனது தாத்தா சின்னையா 13.07.1987ல் ஒரு முச்கலிக்கா மூலம் பாகம் பிரித்து கொடுத்த விபரம் தெரியுமா என்றால் தெரியாது. அவ்வாறு பாகம் பிரிக்கப்பட்ட சொத்தை அவரவர்களுக்கு ஒதுக்கப்பட்டது என்றால் அவ்வாறு பாகம் ஏதும் பிரிக்கப்படவில்லை என்று எனது பெரியப்பா ராஜலிங்கம் சொல்லியுள்ளார்.

14) என்னிடம் காட்டப்படும் பாகப்பிரிவினை முச்சலிக்காவின் ஜெராக்ஸ் நகலில் உள்ள 6வது கையெழுத்து என் அப்பாவின் கையெழுத்து இல்லை.

15) எனது அப்பாவிற்கு எனது தாத்தா ஒரு கிரையப்பத்திரம் எழுதி கொடுத்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

16) என் தாத்தாவை எனக்கு தெரியும். ஆனால் அவரின் கையெழுத்து எனக்கு தெரியாது.

17) பிரதிவாதி எனது அப்பாவின் அண்ணன் மகன், எனக்கு அண்ணன் முறை என்றால் சரிதான். எனது தந்தை துரைச்சாமி மெக்கானிக் தொழில் செய்தவர் என்றால் ஆமாம். அந்த மெக்கானிக் தொழில் மன்னர் வளாகத்தில் செய்தார் என்றால் சரிதான்.

18) எனது தாத்தா சின்னையா வாராப்பூரில் ஒரு முக்கியமான அம்பலகாரர் என்றால் அது எனக்கு தெரியாது. முக்கிய அம்பலகாரர் என்ற முறையில் எங்கள் குடும்பத்திற்கு எனது தாத்தா,அப்பா,பெரியப்பா ஆகியோர்களுக்கு மன்னர் குடும்பத்தில் தொடர்பு உண்டு என்றால் இல்லை.

19) ஊர் அம்பலம் என்ற அடிப்படையில் மன்னரிடம் அணுகி துரைச்சாமி அவர்கள் வீடுகட்டி குடியிருந்து வரும் இடத்தை எனது பெரியப்பா அய்யாக்ண்ணு தலைமையில் வாங்கி கொடுத்தார் என்றால் இல்லை. எனது அப்பா மன்னர் இடத்தில்

ரொம்ப வருடங்களாக மெக்கானிக் ஷெட் வைத்து வாடகைக்கு இருந்தார். மன்னர் விற்கபோவதாக சொன்னதன் பேரில் எனது அப்பா அதை விலைக்கு வாங்கிக்கொண்டார்.

20) 10,15 வருடங்களுக்கு முன்பு மெக்கானிக் ஷெட் வைத்து நடத்தி வரும்போது, பிரதிவாதி அங்கு அவருடன் இருந்தார் என்றால் இல்லை. எனதுஅப்பா 20 வருடங்களுக்கு முன்பே மெக்கானிக் ஷெட் வேலையை விட்டுவிட்டார். அவருக்கு பார்வை குறைபாடு ஏற்பட்டதால்.

21) பிரதிவாதி வெளிநாட்டில் 15 வருடங்களாக இருந்தார் என்றால் நாங்கள் டவுனில் இருந்தோம். அவர் கிராமத்தில் இருந்தார் . அதனால் அவர் எங்கிருந்தார் என்ற விபரம் எனக்கு தெரியாது.

22) பிரதிவாதி வெளிநாட்டில் இருந்த சமயங்களில் குடும்ப வரவு, செலவு சம்மந்தமாக எனது அப்பாவும், பிரதிவாதியும் பேசிக்கொள்வார்கள் என்றாலும், கடிதம் எழுதிக்கொள்வார்கள் என்றாலும் அது பற்றி எனக்கு தெரியாது. அவ்வாறு இருந்த காலங்களில் 01.10.2002ல் வெளிநாட்டில் இருந்த பிரதிவாதிக்கு என் சொத்துக்களை வாங்கிக்கொள் என்று ஒரு கடிதம் எழுதினார் என்றால் எனக்கு தெரியாது. அதற்கு மறுப்புக்கடிதம் தெரிவித்து பிரதிவாதி கடிதம் எழுதினார் என்றால் எனக்கு தெரியாது.

23) அந்த சமயத்தில் 31.03.2003ல் எனது அத்தையின் கணவர் உங்கள் சொத்து வெளியில் போக கூடாது அதனால் நீங்களே வாங்கி கொள்ளுங்கள் மாப்பிள்ள என்று ஒரு கடிதம் பிரதிவாதிக்கு எழுதினார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

24) உறவினர்கள் சொன்னதன் அடிப்படையில் பிரதிவாதி கருணாநிதி எனது தந்தையிடம் சொத்தை வாங்கிக்கொள்வதாக ஒப்புக்கொண்டு,அவரது மனைவி சாந்தா பெயரில் ஒரு கிரையப்பத்திரம் எழுதி வாங்கியுள்ளார் என்றாலும், அதில் எனது அப்பாவும், அம்மாவும் கையெழுத்து செய்துள்ளார்கள் என்றாலும் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் 09.06.2003 தேதியிட்டு ஜெராக்ஸ் கிரையப்பத்திரத்தில் இருப்பது என்னுடைய அம்மா,அப்பாவின் கையெழுத்துக்களா என்றால் அவர்கள் போட்டார்களா என்று எனக்கு தெரியாது.

25) அந்த பத்திரத்தில் விற்ற சொத்துக்களின் உண்மை தன்மை மறைக்கப்பட்டுள்ளதால், பிரதிவாதி ஊருக்கு வந்த பிறகு தன்னுடைய சிறிய தந்தை துரைச்சாமியிடம் பேசி, விடுபட்ட விபரங்களை மீண்டும் சேர்த்து ஒரு திருத்தல் பத்திரம் போட வேண்டும் என்று கேட்டுக்கொண்டார் என்றாலும், அந்த திருத்தல் பத்திரம் 11.02.2005ம் தேதி ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றாலும் எனக்கு தெரியவில்லை. என்னிடம் காட்டப்படும் பத்திரத்தில் உள்ள கையெழுத்து எனது பெற்றோர்கள் போட்டார்களா என்று எனக்கு தெரியவில்லை.

26) நான் முதன்மை சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள அ.வ.எண்.269/2022 வழக்கு இந்த தாவாசொத்திற்கு போடப்பட்ட வழக்கு என்றால் பூர்வீக சொத்து சம்மந்தமாக போடப்பட்ட வழக்கு.

27) இந்த வழக்கை தாக்கல் செய்வதற்கு முன்பாக பிரதிவாதியை அணுகி எனது அப்பா சில பேச்சு, வார்த்தைகளை நடத்தினார் என்றால் அது எனக்கு தெரியாது.

28) எனது அப்பா பிரதிவாதியிடம் நடத்திய பேச்சு, வார்த்தையில் எனது சொத்திற்கு தற்போது மதிப்பு அதிகம் என்று கூடுதலாக 25லட்சம் பணம் கேட்டார் என்றாலும் அவ்வாறு பேச்சு, வார்த்தை நடந்ததாக சொல்வது பற்றி எனக்கு தெரியாது.

29) எனது அப்பா எங்களது குடும்பத்தில் நடந்த உண்மைகளை சொல்லாததால் உண்மையை மறைத்து வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல.

30) வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக நானோ, எனது அண்ணன், தம்பிகளோ பிரதிவாதியிடம் பேசினோமா என்றால் பேசவில்லை.

31) வழக்கிற்கு பின்னிட்டு எனது அப்பா சம்மட்டிவிடுதிக்கு சென்று எனது பெரியப்பா ராஜலிங்கத்தின் மூலமாக பிரதிவாதிக்கு தொந்தரவு கொடுத்தார் என்றால் இல்லை.

32) பணத்தை பெற்றுக்கொண்டு, சொத்தை விற்றுவிட்டு தன்னை தொந்தரவு செய்ததால்தான் பிரதிவாதி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றால் இல்லை. காவல் நிலையத்தில் எங்களுக்கிடையே வாக்குவாதம் ஏற்பட்டது என்றால் அவ்வாறு இல்லை. என்னை அசிங்கமாகவும், தங்கை என்ற உறவினை மீறி அசிங்கமாக பேசினார்.

33) வழக்கை வாபஸ் வாங்க சொல்லி காவல் நிலையத்தில் வைத்து பிரதிவாதி என்னை மிரட்டி உயிர் பயத்தை கொடுத்தார்கள். அங்கு இருந்த காவல் அதிகாரிகள் பிரதிவாதிக்கு ஆதரவாக பேசினார்கள். நாங்கள் அவர் மீது கொடுத்த புகாரை காவல் துறையினர் எடுக்கவில்லை. காவல் துறையினர் நீங்கள் ஒரே குடும்பத்தை சேர்ந்தவர்கள் என்றும், உங்களுக்குள் பேசி தீர்த்துக்கொள்ளுங்கள் என்றும் அறிவுறுத்தினார்கள் என்றால் இல்லை. காவல் துறையினர் பிரதிவாதி அசிங்கமாக பேசுவதை பார்த்துக்கொண்டுதான் இருந்தார்கள். அவர்களுக்கு ஆதரவாகத்தான் இருந்தார்கள்.

34) மான நஷ்ட வழக்கு போடுவதற்கு காரணம் எனது தந்தையார் தான் என்றால் இல்லை. பிரதிவாதி எனக்கு கொடுத்த அசிங்கம், அவமானம் மற்றும் நான் வேலை பார்க்கும் இடம், என்னை திருமணமான ஊரில் வந்து அசிங்கபடுத்தி, இதனால் எனது கணவருக்கும் எனக்கும் இடையே பிரச்சினைகள் உருவாவதற்கு காரணமாக செயல்பட்டார். எனது கணவர் சட்டம் படித்தவர், ஆசிரியராக பணியாற்றுகிறார்.

35) எனது கணவருக்கும், பிரதிவாதிக்கும் இடையே என்னால் வருத்தம் உண்டு என்றால் அப்படி ஏதும் கிடையாது. எனக்கும்,எனது கணவருக்கும் இடையே மனவருத்தம் ஏற்பட்டு, அதற்கு பிரதிவாதிதான் வந்து பேசினார் என்றால், அவ்வாறு எங்களுக்கிடையே மனவருத்தம் ஏதும் இல்லை.

36) நான் தாக்கல் செய்துள்ள பிராதிலும், பிரமாண வாக்குமூலத்திலும் காவல் துறை அதிகாரிகள் ஒருதலைபட்சமாக செயல்பட்டார்கள் என்று சொல்லியிருப்பதற்கு, ஏன்

சட்டம் தெரிந்த நீங்கள் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால், சார்பு நீதிமன்ற வழக்கை வாபஸ் பெற்றுக்கொள்ளசொல்லி பேசினார்கள். அதனால் எனது அண்ணி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் புகார் கொடுத்தார். எங்களுக்கும் அந்த பொய் புகாருக்கும் சம்மந்தம் இல்லை என்று எழுதி கொடுக்க போலீசார் கேட்டுக்கொண்டதன்படி எழுதி கொடுத்தார்.

37) அ.வ.எண்.59/2023 வழக்கு இந்நீதிமன்றத்தில் எனது அண்ணி தாக்கல் செய்திருந்தால், எனது அண்ணி பெயரிலும் அந்த பொய் புகாரை கொடுத்திருந்தார்கள். அதனால் எனது அண்ணி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் புகார் கொடுத்தார். அந்த புகாரின் பேரில் என்ன விசாரணை நடந்தது என்று நாங்கள் தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் மனு செய்திருந்தோம். அதில் பிரதிவாதி அழைத்தும் விசாரணைக்கு வரவில்லை என்று சொல்லி அனுப்பியிருந்தார்கள்.

38) எனது தாத்தா சின்னையா பாகம் பிரித்து கொடுத்த சொத்தையும், எனது அப்பா, எனது அம்மா கிரையம் கொடுத்த சொத்தையும் மேலும் பணம் கேட்டதால், பிரதவாதி எங்கள் மீது புகார் கொடுத்தார் என்றால் அது பொய் புகார்.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வாய்தா வழங்கப்படுகிறது.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

முதன்மை மாவட்ட நீதிபதி,
புதுக்கோட்டை.